முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் விசுவாமித்திரர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.11.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **அதர்மம் வென்று மீட்கவே**
**அகத்தியர் சன்மார்க்கம் கொண்டு**
**பூதலத்தில் அறம் வளர்த்து**
**புண்ணியம் பெருக்கி வரும் அரங்கனே**

2. அரங்கனே ஆறுமுகன் அவதாரமே
அகிலமதில் உன் பெருமை கூறி
வரங்களென ஒளி சூட்சும நூலை
வழங்கிடுவேன் **விளம்பி துலை திங்கள்**

3. **திங்களிலே மூவாறு திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு விசுவாமித்திரர் யானும்**
ஓங்கார தர்ம உலகம் அமையவும்
ஓதிடுவேன் உலகோர் தருமபலம் பெறவும்

4. பலம் தரும் மனவளம் தரும்
பரிபக்குவம் ஞானமும் தரும்
களம் கண்ட ஆறுமுகன் துணை கொண்ட
கந்தமகா சக்தியாக வந்தநல்

5. வந்தநல் ஆறுமுக ஞானியை
வணங்கி உலகோர் வருக
முந்தை வினை அகலுவதுடன்
முழுமை ஞானம் அடைந்து சிறப்பர்

6. சிறப்பறிவும் சித்திகளும் அருளும்
சிறப்புமிக்க ஞானத் தலைவன்
மறுப்பில்லா மும்மூர்த்திகளும் ஏற்ற
மரணம் வென்ற ஞான சூட்சும

7. சூட்சும ஞானி வழிகளை
சுருதிபடி உலக மக்களெல்லாம்
மாட்சிமைபட ஏற்றுத் தொடர
மண்ணுலகே ஞான பலம் பெறும்

8. பெருமைமிகு ஏழாம் படை வீட்டை
பேருலகோர் நாடி வருதலுற
பெருமைபட மக்களின் பொருள் வளம்
பிசகில்லா மேல்நிலை காணும்

9. காணவே தீட்சை ஏற்று
கலியுக ஞானி திருவடியை
ஞானமாக சரணடைந்தவர்க்கு
ஞானமோடு தனதேட்டு வளம்

10. வளமுடன் நல்ல இல்லற சிறப்பும்
வசதிபட தான தரும பலமும்
பலமுடன் உலகோர் அடைந்து
பாடிடுவேன் அரங்கன் தரும வேலிக்குள்

11. வேலிக்குள் வந்து உலகோர்
வினையில்லா பெரும் பாதுகாப்பும்
அழியாமையும் பெற்று உயர்வர்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் விசுவாமித்திரர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் நிலவும் அதர்மத்தினை வென்று அதர்மத்தின் பிடியினில் அகப்பட்ட தர்மத்தினை மீட்டு, தர்ம உலகமாக இவ்வுலகை மாற்றிட அகத்தியர் சன்மார்க்க சங்கம் என்ற ஆற்றல்மிகுந்த அமைப்பினை உருவாக்கி சன்மார்க்க சங்கம் மூலம் உலகமெங்கும் அறம் வளர்த்து உலகின் புண்ணிய பலத்தினை பெருக்கி உலகை புண்ணிய லோகமாக ஆக்கிக் கொண்டிருக்கும் முருகப்பெருமானின் அவதார யுகமாற்ற ஞானியே அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உமது பெருமைகளைக் கூறி உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே விசுவாமித்திரர் யானும் இவ்வுலகம் ஓங்கார தருமஉலகமாக மாறிடவும் உலக மக்கள் தரும பலம் பெறவும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் விசுவாமித்திரர்.

சர்வபலங்களையும் தந்தருளுகின்றவரும், மனவளம், பரிபக்குவம் ஞானமும் தந்தருளும் பல போர்களை கண்டு வெற்றி கண்டவரும் முருகப்பெருமானின் துணையைக் கொண்டு இயங்கிடும் மகா ஞானி கந்தமகா சக்தியின் வடிவமாய் வந்தநல் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியை உலக மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கி வர, அவரவரைப் பற்றிய முன் ஜென்ம பாவங்களெல்லாம் விலகி ஓடுவதுடன் இச்சென்மத்தில் முழுமை ஞானம் அடைந்து சிறப்படைவார்கள்.

மெய்ஞான சிறப்பறிவையும், சித்திகளையும், கருணையோடு தந்தருளும் சிறப்புமிக்க ஞானத்தலைவன் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் எனும் மும்மூர்த்திகளும் மறுப்பேதும் இன்றியே ஏற்றுக் கொண்ட மகா ஞானி மரணத்தை வென்று வெற்றி கண்ட மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற ஞானசூட்சும ஞானயோகி ஆறுமுக அரங்கமகா தேசிகரின் ஞானவழிகளை, எளிமையும் இனிமையும் தருமமும்மிக்க ஞானவழிகளை உலக மக்கள் விரைந்து ஏற்று மேன்மைபட பயபக்தியுடன் கடைப்பிடித்து அரங்கனை ஞானவழி பின் தொடர்ந்து வர வேண்டும். அரங்கனை ஏற்று அரங்கன் கொள்கை வழி நடந்து உலக மக்கள் வந்திட இந்த உலகமே ஞானபலம் பெற்று ஞானஉலகாகும்.

பெருமைமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை உலக மக்களெல்லாம் பயபக்தியுடன் நாடிவர, பெருமை படுமளவிற்கு மக்களின் பொருள் வளம் பெருகிடும். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைந்திட கலியுக ஞானி அரங்கன் திருவடி பணிந்திட, பணிந்து சரணடைந்து விட சரணடைந்தவர்க்கு ஞானத்துடன் தேவையான பொருளும் அருளும் கிடைக்கப் பெறுவதோடு இல்லறமும் நல்லறமாக அமைந்து வசதியான வாழ்க்கையும் தானதரும பலமும் பெருகி மகிழ்வான வாழ்வை வாழ்வர்.

அவரெல்லாம் ஆறுமுக அரங்கன் அமைத்த தர்மவேலிக்குள் வந்து வினை சூழாத பெரும் வாழ்வை வாழ்ந்து வினையற்ற பெரும் பாதுகாப்பையும் அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்று உயர்ந்த நிலையை அடைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் விசுவாமித்திரர்.

–சுபம்–